**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.454** **நாள்: 08.12.2023**

**மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் பெருங்குடி, ஆலந்தூர், மற்றும் வளசரவாக்கம் மண்டலங்களில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணி நடவடிக்கைகளை இன்று (08.12.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

- **பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 22 சுரங்கப்பாதைகளும் மக்கள் போக்குவரத்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.**
- **மாநகராட்சி பேருந்து தட சாலைகளில் 67 இடங்களில் தேங்கிய மழைநீர்த்தேக்கத்தில் 57 இடங்களில் மழைநீர் வெளியேற்றப்பட்டுள்ளது. 5 இடங்களில் மட்டும் மழைநீர் வெளியேற்றும் பணி நடைபெற்று வருகிறது.**
- **சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியம் மூலமாக 07.12.2023 மற்றும் 08.12.2023 ஆகிய 2 நாட்களில் 8,511 நடைகளில் லாரிகள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டுள்ளது என மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் தகவல்**

இன்று (08.12.2023) மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி, ஆலந்தூர், மற்றும் வளசரவாக்கம் மண்டலங்களில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணி நடவடிக்கைகள், பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உணவு விநியோகம் ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் கனமழை மற்றும் மிக்ஜாம் புயலின் காரணமாக பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட வார்டு-190, துலுக்காத்தம்மன் கோயில் தெரு மற்றும் சாய்பாலாஜி நகர், ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட மணப்பாக்கம் ரிவர்வியூ காலனி, வார்டு-156க்குட்பட்ட திருவள்ளுவர் நகர், வளசரவாக்கம் மண்டலத்திற்குட்பட்ட வார்டு-151, சுப்பிரமணி சாமி நகர், வார்டு-152, அம்பேத்கர் சாலை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகள் மற்றும் மீட்பு உள்ளிட்ட களப்பணி நடவடிக்கைகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், துலுக்காத்தம்மன் கோயில் தெரு மற்றும் சாய்பாலாஜி நகரில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட 1000 நபர்களுக்கு பாய், பிஸ்கெட் மற்றும் ரொட்டி பாக்கெட்டுகள், குடிநீர் பாட்டில்கள் உள்ளிட்ட உணவுப் பொருட்களையும் வழங்கினார்.

**இந்த ஆய்வில் மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 65 நிவாரண முகாம்களில் 14,268 நபர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டுள்ளது. வெள்ளம் பாதித்த பகுதிகளில் வாகனங்களின் மூலம் இதுவரை (08.12.2023) 47,79,222 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாநகராட்சி சார்பில் 1,04,290 ரொட்டி பாக்கெட்டுகள், 7,01,941 குடிநீர் பாட்டில்கள், 8,47,633 பிஸ்கெட் பாக்கெட்டுகள், 51,733 பால் பவுடர் பாக்கெட்டுகள், 14,574 பால் பாக்கெட்டுகள், 61,380 கி.கி. அரிசி மற்றும் 1,739 கி. பருப்பு உள்ளிட்ட உணவுப் பொருட்கள் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 1,512 மரங்கள் விழுந்துள்ளன. அவற்றில் 1,303 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 209 மரங்களை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 22 சுரங்கப்பாதைகளும் தற்பொழுது மழைநீர்த்தேக்கமின்றி போக்குவரத்திற்கு பயன்பாட்டில் உள்ளது. மேலும், பொதுமக்களுக்கு மழைக்கால நோய்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில், 01.12.2023 முதல் 07.12.2023 வரை நடமாடும் மருத்துவ முகாம்கள் மற்றும் நிலையான மருத்துவ முகாம்கள் என 1,060 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 77,663 நபர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. இன்று (08.12.2023) 623 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 1,162 மோட்டார் பம்புகள் மழைநீர் வெளியேற்றுவதற்காக தயார்நிலையில் உள்ளது. மழைநீர் தேங்கியிருந்த 363 இடங்களில் மோட்டார் பம்புகள் மூலம் 306 இடங்களில் தேங்கியுள்ள மழைநீர் வெளியேற்றப்பட்டு விட்டது. மீதமுள்ள 57 இடங்களில் மழைநீர் வெளியேற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் 488 பேருந்து தட சாலைகளில் 67 இடங்களில் மட்டும் மழைநீர்த்தேக்கம் காணப்பட்டது. இவற்றில் 57 இடங்களில் மழைநீர் வெளியேற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 5 இடங்களில் மழைநீர் வெளியேற்றும் பணி துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கனமழை மற்றும் மிக்ஜாம் புயலினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்கள், வெளிமாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட தூய்மைப் பணியாளர்கள் மூலம் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியம் மூலமாக மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நாள்தோறும் குடிநீரானது லாரிகளில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. 07.12.2023 அன்று 4,227 நடைகளில் 444 லாரிகள் மூலமும், இன்று (08.12.2023) இதுவரை 4284 நடைகளில் 474 லாரிகள் மூலமும் குடிநீர் விநியோகிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சென்னைக் குடிநீர் வாரியத்தின் மூலம் 333 தெருக்களில் உள்ள கழிவுநீர் மற்றும் மழைநீர்த் தேக்கமானது 160 கழிவுநீர் வாகனங்கள் மூலம் 2,072 நடைகளில் அகற்றப்பட்டுள்ளது. மேலும், மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 07.12.2023 அன்று 324 தெருக்களிலும், இன்று (08.12.2023) 526 தெருக்களிலும் தேங்கியிருந்த கழிவுநீர் அகற்றப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.அரவிந்த் ரமேஷ், திரு.கா. கணபதி, மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் திருமதி வி.ஆர்.சுப்புலட்சுமி, இ.ஆ.ப., திரு. திரு.இ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., திரு.கமல் கிஷோர், இ.ஆ.ப., தெற்கு வட்டார துணை ஆணையர் திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் திரு.நொளம்பூர் வெ. ராஜன், மாமன்ற உறுப்பினர் திரு.பி. சிவப்பிரகாசம், திரு.ச. சங்கர் கணேஷ், திருமதி ச. பாரதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**